DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | S.T. C No. 757/2025 |
| Deposition of witness | : | PW-1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | திருஞானம் |
| Father's /Husband Name | : | ராமசந்திரன் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 62 |
| Occupation | : | மின்வாரிய பணியாளர் ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day March 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மின்வாரியத்தில் பொறியாள்ராக பணி செய்து ஓய்பு பெற்றுள்ளேன். கடந்த 31.8.2023 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நான் பேரளம் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலகத்தில் பணியில் இருந்தபோது வீட்டு மின் இணைப்பு துாண்டித்து விட்டதாக பிரச்சனை ஏற்பட்டு அலுவலகம் அருகே சுமார் 20 நபர்கள் கூடி விட்டார்கள். அதனால் நடவடிக்கை எடுக்க வேண்டி நான் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்டும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** குறியீடு செய்யப்படுகிறது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசுத்தரப்பு சாட்சி அரசிற்கு ஆதரவாக சாட்சிமளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் கீழ் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அரசுத்தரப்பில் கோரியதால் வழக்கின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 31.8.2023 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நான் பேரளம் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலகத்தில் பணியில் இருந்தபோது ஆஜர் எதிரி எனது அலுவலகத்திற்கு வந்து அவரது வீட்டு மின்இணைப்பை மின்கட்டணம் செலுத்தாததால் துாண்டித்ததால் பிரச்சனை செய்து என்னை அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றும் அது தொடர்பாக புகார் அளித்துவிட்டு தற்போது எதிரியுடன் சமாதனாம் செய்துகொண்ட காரணத்தினால் உண்மை சம்பவத்தை

மறைத்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**– இல்லை –**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.